(iii) ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களில் வறட்சி நிலையும், நிவாரண வேலைகளும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Under rule 42 of the Assembly Rules, I have given notice of the following motion :—

That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely the severe drought in Hosur Taluk and in the western part of Krishnagiri Taluk of the Dharmapuri District, and the need to take up immediate and suitable steps.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் அவசரமும் பொது முக்கியத் துவமும் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் விதிமுறைகளின் கீழ் வரவில்லை. பொதுவாக, ஓசூர் தாலுகாவும், கிருஷ்ணகிரி வட்டாரமும் வடகிழக்கு, தென்மேற்கு இரு பருவக் காற்றுகளினால் நல்ல மழையைப் பெற்றிருக்கின்றன. வழக்கமாக விளைகின்ற நெல், ராகி போன்ற பயிர்கள் நன்றாக விளைந்திருக்கின்றன. இந்தப் பயிர்கள் எல்லாம் 50 சதவிகிதத்திற்குமேல் அறுவடை யாகியிருக்கின்றன. இன்றுகாலை ஒரு மணி நேரத்திற்குமுன் தர்மபுரி மாவட்டக் கலெக்டர் இந்தச் செய்தியை அறிவித்திருக் கிறார். கனம் உறுப்பினர் கூறுகின்ற ஜனவரி முதல் எப்ரல் வரை யுள்ள நான்கு மாதங்கள் வரை அங்கு பஞ்ச நிலைமை என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. நீர்நிலைகள் கொஞ்சம் பாதிக்கப் பட்டிருக்கலாம். ஆனால் புஞ்சைத் தானியங்களைப் பொறுத்தவரை, கொள், கம்பு, ராகி போன்றவை நல்லமுறையில் விளைந்திருக் கின்றன. கிருஷ்ணகிரி வட்டாரத்திலும் பஞ்ச நிலைமை நிலவ வில்லை. கூடுமான வரையில், ரெவின்யூ அதிகாரிகளும், மாவட்டக் கலெக்டரும் எந்தெந்தக் காரியங்களை எப்பொழுது எப்பொழுது செய்ய வேண்டுமோ அதைச் சரியாகச் செய்து வருகின்றார்கள். கனம் உறுப்பினர் கூறுகின்ற மாதிரி இது அவசரப் பிரச்சினைக்கு உரிய நிகழ்ச்சி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பருவமழை தவறு வதும், அதன்காரணமாக விளைச்சல் குறைவதும் அன்றாடம் நடைபெறும் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரிய மாகையால், இது அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த தல்லவாதலால், சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

(iv) இராமநாதபுரம் மாவட்டத்தில் சில வட்டங்களில் விளைச்சலின்மையும், வரி, கடன் வசூலும்

திரு. கரு. சீமைச்சாமி : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக் கையை ஒத்திவைத்து, கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம்

வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக சிவகங்கை, திருவாடனை, முதுகுளத்தூர் தாலுகாக்களில் கண்மாய்கள் உடைபட்டு இன்னும் பழுதுபார்க்கப்படாமல் உள்ளபடியாலும், தற்போது கண்மாய்களில் தண்ணீர் இல்லாததாலும் பயிர் விளைச்சல் ஏதுமின்றி மக்கள் வாழ்க்கை நடத்த வசதி இல்லாமல் அவதிப்படும் இத்தருணத்தில் அதிகாரிகள் வரி, கடன் முதலியவற்றை நிர்ப்பந்தமாக வசூலிப்பதுபற்றி விவாதிக்க."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது 41-வது விதிப்படி அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினை ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரால் கனம் அங்கத்தினர்கள் கொடுத்துவிடுகிறார்கள். இது பருவமழை தவறியதனால் உண்டான பிரச்சினை. ஆகவே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல என்பதைக் கூறி, இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான அவசரத் தீர்மானங்களைப் பேரவைத் தலைவர் ஒன்று, தன்னுடைய அறையிலேயே பார்த்து நிராகரித்திருக்க வேண்டும். அவர் சொல்வதற்கு நேர் முரணாக பருவமழை பெய்திருக்கிறது. கனம் உறுப்பினர் கொடுத்த தீர்மானத்திற்குப் பதில் கூறும் வகையில் அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் அன்றாட நடவடிக்கைகளின் கீழ் வருகிறது என்று கூறி தள்ளிவிடக்கூடாது. அப்படித் தள்ளிவிட வேண்டுமென்றால், அதை அவருடைய அறையிலேயே தள்ளியிருக்க வேண்டும். நண்பர் திரு. சீமைச்சாமியை காரணங்களைச் சொல்லச் சொல்லி விட்டுவிட்டு, அரசாங்கத்தின் சார்பிலும் பதில் அளிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : The hon. Member is raising the adjournment motion. If the Food Minister wants to explain, we have no objection. But he cannot crop up at any moment and try to explain the point of view of the Government. This is an adjournment motion. Is the Minister accepting the adjournment of the business of this House?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am complaining that the Government must be given a chance to explain its position, since the Hon. Deputy Speaker has afforded a chance to the Member to explain his position.

(திரு. கரு. சீமைச்சாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் கருத்துக்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தால் போதும்.

1968 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சீமைச்சாமி அவர்கள் சொல்லும் படியான நிலைமை அங்கு இல்லை. வெள்ளம் வந்திருக்கும் நிலைமைதான் ஏற்பட்டது. கண்மாய்களில் எல்லாம் தண்ணீர் இல்லையென்பது நிலைமை. வெள்ளத்தடுப்புக்காக மணல் மூட்டைகள் எல்லாம் திருவாடனைத் தொகுதியில் போடப்பட்டிருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அறுவடை கொஞ்சம் கால தாமதமாகிறது. வரி கட்டவில்லையென்பதற்காக யாருடைய உடைமையும் ஜப்தி எதுவும் செய்யவில்லை. நண்பர் கூறுகிற மாதிரியான அபாயகரமான நிலைமை இல்லை. அங்கு பொதுவான சிரமங்கள் ஏற்பட்டிருப்பது வெள்ளம் அதிகமாக வந்ததால்தான். இன்றுமாலை இராமநாதபுரம் கலெக்டர் அவர்களிடம் இருக்கும் நிலைமையைத் தெரிந்துகொண்டேன். நண்பர் கூறுகிற மாதிரி அபாயகரமானது அல்ல. ஆகவே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கெனவே ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் நிலைமையை விளக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கேட்டதால் இதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்.

(v) கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் கைமாற்றமும், தொழிலாளர் உரிமை பாதுகாப்பும்

திரு. எம். பூபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, கீழ்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"கோவை நகரில் 2,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்லை தற்சமயம் உள்ள உரிமையாளர் கைமாற்றம் செய்து தொழிலாளர்களின் உரிமைகளான மூடிய நாட்களின் சம்பளம், தறிகளை ஓட்டுவது, தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் போன்ற பல உரிமைகளைப்பாதுகாக்கும் பல பொதுமுக்கியத்துவம் கொண்ட விஷயங்களை விவாதிக்க."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி அல்ல. இது அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இதற்காக பேரவையின் அலு